**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 06.11.2025**
**OS. No. 136/2024**
**வழக்கு சாட்சி PW.1–மலர்விழி, க/பெ,சதீஷ்குமார்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என் தந்தை ராஜகோபால் அவர்களின் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நானும், என் தாயார் பார்வதியும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்தோம். என் தாயார் தற்போது இறந்துவிட்டார். என் தாயார் இறந்தபோது அவருக்கு 56 வயது ஆகும். என் தந்தை ராஜகோபால் அனல் மின் நிலையத்தில் இளநிலை பொறியாளராக வேலை செய்து வந்தார், அவர் கடந்த 28.10.2023 ம்தேதியில் இறந்துவிட்டார். என் தந்தைக்கு உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் உள்ளார்கள். என் தந்தையின் பெற்றோர்கள் என் தந்தை இறப்பிற்கு முன்பே இறந்துவிட்டனர். ராஜகோபால் மற்றும் 1 ம் வாதி ஆகியோருக்கு நான் தத்து மகள் என்றால் சரிதான்.

2) என் தந்தை ராஜகோபாலுக்கு பூங்கொடி என்பவருடன் முதலில் திருமணம் ஆனது. அவர்களுக்கு கௌரிசங்கர் என்று ஒரு மகன் இருந்தார். அவர் இறந்துவிட்டார். மேற்படி பூங்கொடி என்பவர்மறு திருமணம் செய்து கொண்டார். மேற்படி ராஜகோபால் மற்றும் பூங்கொடிக்கு இடையே நீதிமன்றம் மூலம் விவாகரத்து நடந்துள்ளதா என்றால் நடந்துள்ளது, அந்த மனுவின் உத்தரவும் நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு தான் 1 ம் வாதியை ராஜகோபால் திருமணம் செய்து கொண்டாரா என்றால் ஆமாம். மேற்படி திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, சென்றாய பெருமாள் கோவிலில் நடந்தது, அதற்குண்டான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்துள்ளேன்.

3) என் தாயார் பார்வதி அவர்களுக்கு முதலில் ராமசாமி என்பவருடன் திருமணம் ஆனது, அந்த திருமணத்தின் பயனாக நான் பிறந்ததேன். ராமசாமி அவர்கள் உடல்நல

குறைவால் இறந்தபிறகு என் தாயார் ராஜகோபால் என்பவரை திருமணம் செய்து கொண்டார். என்னை அவர் தத்து எடுத்துகொண்டார். திருமணத்திற்கு பிறகு என் தாயாரும், என் தந்தையும், நானும் கொளத்தூர் ஓம் காளியம்மன் தெருவில் வசித்து வந்தோம். தற்போது எதற்காக வாரிசு சான்றிதழ் கோரியுள்ளோம் என்றால் என் தந்தையின் சொத்து மற்றும் பணி பலன்கள் ஆகியவற்றை பெறுவதற்காக எனக்கு வாரிசு சான்றிதழ் தேவைப்படுகிறது. என் தந்தை என்னை தத்து எடுத்ததன் அடிப்படையிலும், உயில் ஆவணத்தின் அடிப்பபடையிலும் வாரிசு சான்றிதழ் கோருகிறேன். அந்த உயில் பதிவு செய்யப்படாத ஒன்று என்றால் சரிதான்.

4) ராஜகோபாலின் இறுதி காரியங்களை வாதிகளாகிய நாங்கள் தான் செய்தோம். அந்த இறுதி சடங்கில் ராஜகோபாலின் உடன் பிறந்தவர்களும் கலந்து கொண்டனரா என்றால் கலந்து கொண்டனர். எனக்கு செய்யவேண்டிய சீர்வரிசைகள் அனைத்தும் தந்தை என்ற அடிப்படையில் ராஜகோபால் தான் செய்து வந்தார். உயில் ஆவணத்தின் சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் உள்ளோம். என் தந்தை உடல் நல குறைவால் பெற்ற கடன்கள் அனைத்தும் நான் தான் செலுத்தினேன். இந்த வழக்கை பொறுத்தவரையில் நீதிமன்ற உத்தரவுபடி செயல்பட பிரதிவாதிகள் தயாராக உள்ளனர் என்றால் சரிதான்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.